14th March 1966]

வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் அரசாங்கம் கவனிக்கும். ஆனால் கன்ஸ்யூமர்களும், தங்களுக்கு கண்காணிக்கிற உரிமை மட்டும் இருக்கிறது என்று இல்லாமல், சாப்பிடுகிற உரிமை இருக்கிறது என்று மட்டும் இல்லாமல் இது போன்ற விநியோக ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்ய முன்வருவார்களானால் அரசாங்கம் அவர்களுக்குப் போதுமான உதவி செய்வார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்தக்கூடிய முறையிலே கனம் அங்கத்தினர் முயற்சி எடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தரிசாகவுள்ள நஞ்சை நிலங்கள்

* 276 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் இந்த பசலி (1375)-யில் தண்ணீர் பற்றுக்குறையால் சாகுபடி செய்ய முடியாமல் தரிசுபட்ட நஞ்சை நிலங்கள் எவ்வளவு ?

(இ) தாலுகாவாரியாக குறுவை, சம்பா, தாளடி நிலங்களில் சாகுபடி செய்யாமலிருந்த (தரிசான) நிலங்கள் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (a) An extent of 22,569 acres of wet lands was left uncultivated in fasli 1375 due to scarcity of water.

(f) A statement[a] showing the taluk-wise and crop-wise particulars of lands left uncultivated is placed on the Table of the House.

திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கும்பகோணம் தாலுகாவிலே குறுவைச் சாகுபடி செய்கின்ற நிலம் தரிசாக இல்லை என்ற தகவலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். கும்பகோணம் தாலுகாவில் மன்னியாறு ஆற்றுப் பாசனப் பகுதியில் மேட்டூர் அணை திறந்து 1, 1½ மாதங்களாகத் தண்ணீர் வரவில்லை. அங்கே குறுவை சாகுபடி செய்யப்படாமலே இருந்திருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள் தந்த விடையில் அந்தத் தகவல் இல்லை. ஆகவே இந்தத் தகவலை மறுபடியும் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தப் புள்ளிவிவரம் தவறாக இருக்க முடியாது. ரெவின்யூ இலாகாவிலிருந்து அதிகாரிகள் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதில் அங்கத்தினர் குறிப்பிட்ட விவரங்கள் இல்லை. என்ன விவரம் சேகரிக்கப்படவில்லை என்று எழுதியனுப்பினால் அரசாங்கம் அதைக் கவனிக்கும்.

திரு. சா. கணேசன் : இதேமாதிரி நான் ஏற்கனவே பட்ஜெட்டிலே பேசுகின்ற பொழுதுகூட கும்பகோணம் பகுதியிலே குறிப்பாக கடமங்குடிப் பகுதியிலே ஏராளமான ஏக்கர்கள் தண்ணீர் கிடைக்காமையினால் தரிசாகப் போய்விட்டன. அதற்குக் காரணம் அது மேட்டுப் பகுதி என்று சொல்லப்படுகிறது. அதற்கு 'பெட்'

a Printed as Appendix on page 223 infra.

[14th March 1966

கட்டினால் நன்றாக இருக்குமென்றும் நான் ஆலோசனை சொன்னேன். நான் இந்தத் தகவலைக் குற்றமாகச் சொல்லவில்லை. புள்ளி விவரம் சேகரிப்பதில், எங்கோ, ஏதோ, எப்படியோ தவறு இருக்கிறது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. ஆகவே, இதைத் திருத்தி செம்மையான புள்ளிவிவரத்தை இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அப்படி முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்தினுடைய கடமை கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களை முறையாகக் கொடுக்கக் கூடியது. அங்கத்தினர் சொல்லுகின்ற பகுதி குறுவைப் பகுதியாக இருக்கிறதா என்பதைத் தெரிந்துதான் கூற வேண்டும். தஞ்சையிலே எல்லா நிலங்களும், அங்கே இருக்கக்கூடிய 12, 13 லட்சம் ஏக்கர்களும் குறுவைச் சாகுபடி நிலங்கள் இல்லை. குறுவைச் சாகுபடி நிலங்கள் 2 அல்லது 2½ லட்சம் தான் இருக்கும். இதைத் தவிர எங்கெங்கெல்லாம் மேட்டுப் பிராந்தியமாக இருக்கிறதோ அங்கெல்லாம் குறுவைச் சாகுபடி நடப்பது இல்லை. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட பகுதி குறுவைப் பகுதி; அது தண்ணீர்ப் பற்றாக்குறையால் தரிசாகப்போய்விட்டது என்று சொன்னால் அதைப்பற்றி நான் தெரிந்து தான் சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : விளைச்சல் நிலங்களில் தண்ணீர் இல்லாத காரணத்தால் விளையவில்லை என்று கூறி வரி வாஜா செய்ய
9-00 a.m. வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தரிசு நிலங்களைப் பொறுத்தவரையாவது முதல் கட்டமாக வரி வஜா செய்யும் உத்தரவைப் பிறப்பிக்க முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் ரெவின்யூ இலாகா விதி முறைகளை அறிந்திருந்தால் இந்த உப கேள்வியைக் கேட்பதற்கே இடம் இருந்திருக்காது. எங்கெங்கு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்ற கணக்கு இலாகாவிடம் இருக்கிறது. அதற்கு என்ன நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று அதிகாரிகள் காத்துக் கொண்டிருக்கமாட்டார்கள், அதிகாரிகளே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. கோ. சி. மணி : தஞ்சை மாவட்டத்திலே ஒரு ஏக்கருக்கு மூன்று கலத்திற்கு உட்பட்டு விளைந்த நிலங்களைப் பற்றிய கணக்கைத் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்திலிருந்து அது போன்ற உத்தரவு போனதாகத் தெரியவில்லை.

Water from Krishnarajasagar

*277 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to approach the Government of Mysore for release of adequate